மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், அங்கு மேலும் சில சிட்கோ தொழிற்பேட்டைகளை உருவாக்கிட ஏதுவாக, சிட்கோ நில வங்கிக்காக, செங்கம் வட்டம், பெரியகோலப்பட்டி கிராமத்தில் 50 ஏக்கர் நிலமும்; கண்ணக்குருகை கிராமத்தில் 24 ஏக்கர் நிலமும்; திருவண்ணாமலை வட்டம், கண்ணத்தன்பூண்டி கிராமத்தில் 20 ஏக்கர் நிலமும்; செய்யாறு வட்டம், அன்னக்காவூர் கிராமத்தில் 27.36 ஏக்கர் நிலமும்; ஆக, நான்கு இடங்களில் நிலம் கண்டறியப்பட்டு, அங்கும் புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

35—

தொழிற்பயிற்சி நிலையம்

***3855 திருமதி மு. சந்திரபிரபா:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூரில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் தங்கள் உள்ளம்! ஏழை மக்கள் வாழ்வினிலே ஏற்றம் தரும் விடிவெள்ளி! தொலைநோக்குப் பார்வையாலே நம் மக்கள் துயர் போக்கி, மாநிலத்தைச் சீர்தூக்கி, தடைகளைத் தகர்த்தெறிந்த தரணி போற்றும் தவப் புதல்வி! உங்கள் விரல் அசைவில் வெற்றி கிட்டும். (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் புகழ் என்றும்*

2016 ஆகஸ்ட் 8]

விண்ணை முட்டும், தாயே! தமிழே! தமிழகத்தைக் காக்க வந்த தன்னிகரில்லா தலைவியே! வணக்கத்திற்குரிய அம்மா அவர்களுக்கு என் முதற்கண் வணக்கம்.

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி அமைந்துள்ள விருதுநகர் மாவட்டத்தில் தற்போது 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 655 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. இவற்றில், 73 இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. எனவே, புதியதாக மேலும் ஓர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூரில் அமைக்கத் தேவை ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று தமிழக மக்களின் நலனுக்காகவே தவ வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். ஏழை எளிய குடும்பத்திலே பிறந்த, எளிமைக்கும் எளிமையான என்மீது பரிவுகொண்டு, விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், அயன்நாச்சியார்கோவில் ஊராட்சி மன்றத் தலைவராக இரு முறை வெற்றிபெறச் செய்து, விருதுநகர் மாவட்டம், இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறையின் மாவட்ட இணைச் செயலாளராகப் பதவி கொடுத்து, 2016 சட்டமன்றத் தேர்தலில் ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெறச் செய்து, சட்டமன்ற உறுப்பினராக்கி, இப்பேரவையில் அமர வைத்து, அழகு பார்க்கும் எங்கள் குடும்பத்தின் குல தெய்வம், அன்பின் சின்னம், பண்பின் சிகரம், கடையேழு வள்ளல்களை மிஞ்சிய கலியுக வள்ளல், (மேசையைத் தட்டும் ஒலி) ஆறாவது முறையாக அரியணை ஏறி, அன்புத் தமிழ் மக்களைக் காக்கின்ற தெய்வம், நான் வணங்கும் இதய தெய்வம் எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் முதற்கண் பணிந்து வணங்குகின்றேன். கழகத்தின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்து, என்னை வெற்றிபெறச் செய்த ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி மக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வசிக்கின்ற தொகுதியாகும். இப்பகுதியில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துக் கொடுத்தால், இங்குள்ள ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவச் செல்வங்கள் பெரிதும் பயன்பெற முடியும். எனவே, கருணையுள்ளம் கொண்ட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தந்திட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய தொழிற்பயிற்சி நிலையம் துவங்குவதற்கு, குறைந்தபட்சம் 3 முதல் 5 ஏக்கர் நிலம் தேவைப்படும். இதற்கு தேசிய தொழிற்பயிற்சிக் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாடத் திட்டத்தின்படி, வகுப்பறைகள், பணிமனைகள், நிருவாக அலுவலகக் கட்டடம் போன்றவை கட்டப்பட வேண்டும். அப்பாடத் திட்டத்தின்படி, பயிற்சிக்குத் தேவையான புதிய கருவிகள், இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்படவேண்டும். அப்போதுதான், மத்திய அரசின் NCVT அங்கீகாரம் பெறப்பட்டு, மாணவர்களுக்கு தேசிய தொழிற் சான்றிதழ் NTC வழங்கப்படும். ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பதற்கு, தோராயமாக ரூபாய் 10 கோடி செலவினம் ஏற்படும். இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, தேவைப்படும் நேர்வில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

2016 ஆகஸ்ட் 8]

திருமதி மு. சந்திரபிரபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஸ்ரீவில்லிபுத்தூரில் தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பது குறித்து பரிசீலனை செய்யும் என்று அறிவித்தமைக்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதிவாழ் மக்கள் சார்பில் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

36—

சிற்றுந்து

***68 திரு. வி.வி. இராஜன் செல்லப்பா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா -

மதுரை மாநகருக்கும் சிற்றுந்து சேவையினை விரிவுபடுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சென்னை மாநகர மக்களுடைய போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னையிலே 200 சிற்றுந்துகளை இயக்குவதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையிலே, சென்னையில் மட்டும், 200 சிற்றுந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.